Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.41/2019**

**Deposition of PW.2 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | ஜாதி | : | |
| க/பெ | : | அன்பழகன் | தொழில் | : | PR Sarees, சின்னாளபட்டி கடையில் வேலை |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 29/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2025.

(1, 2 எதிரிகள் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் சின்னாளபட்டியில் குடியிருந்துகொண்டு சின்னாளபட்டி, PR sarees கடையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எதிரி சாகுல்ஹமீது மற்றும் சேக்உசைன் ஆகியோர்கள் தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை அம்பாத்துரை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து **(அ.சா.ஆ.2/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **(அ.சா.ஆ.3/PW.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எந்த தேதியில் கையெழுத்து போட்டேன் என்று தெரியவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

<u>சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

ஆஜர் எதிரிகள் இருவரையும் என் முன்னிலையில் திண்டுக்கல் தாலுவா அலுவலகம் முன்பு போலிசார் கைது செய்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. 13.10.2015 அன்று 14.45 மணிக்கு எதிரிகளை உங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி சேக்உசைன் என்பவரிடமிருந்து 2 ரப்பர் ஸ்டேம்ப்களை கைப்பற்றினார்கள், அதற்கு சாட்சியாக நீங்கள் அத்தாட்சியில் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரியல்ல. கடந்த 13.10.2015 ஆம் தேதி மாலை 02.45 மணியளவில் திண்டுக்கல் தாலுகா அலுவலகம் முன்பு நானும், கார்த்திக் என்பவரும் நின்றுகொண்டிருந்தபோது காவல் ஆய்வாளர் ஆஜர் எதிரி சாகுல்ஹமீது, சேக்உசைன் ஆகியோரை எங்கள் முன்னிலையில் கைது செய்து

விசாரித்ததாகவும், அப்போது அவர்கள் தனித்தனியாக எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் எதிரி சேக்உசைன் என்பவரிடமிருந்து திண்டுக்கல் தாலுகா அலுவலகம் முன்பு அத்தாட்சியில் 2 ரப்பர் ஸ்டேம்ப்களை கைப்பற்றியதகாவும் போலிஸ் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவத்தை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor